# <u>தூத்துக்குடி நகரமன்றம்</u>
# <u>அவசரக் கூட்டப்பொருள்</u>

**2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11. 00 மணிக்கு தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ் பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.**

## <u>பொருள்கள்</u>

1. தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண் 39க்கு திரு எஸ். கிங்ஸ்லி ரமேஷ் என்பவர் 16–4–2003 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மாத வாடகையாக ரூ 800/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியை நகரமன்றம் பரிசீலனை செய்ததில் இதற்கு முன்னர் உள்ள பழைய மாத வாடகை ரூ 3041/– ஐ விட மிக குறைவாக இருப்பதால் மேற்படி கடையை மறு ஏலம் விட நகர்மன்றம் தீர்மானிக்கப்பட்டது( MCR No. 137 நாள் 30–5–2003)

மீண்டும் 23–6–2003 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கடை எண் 39க்கு ரூ 810/–க்கு திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியை தீர்மானிக்க நகரமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது. அதில் மன்றப்பொருள் அலவலக குறிப்பில் இதற்கு அருகிலுள்ள கடை எண் 38க்கு மாத வாடகை ரூ 1998/– கடை எண் 40க்கு மாத வாடகை ரூ 2168/– எனவும் கடை எண் 39க்கு பழைய மாத வாடகை ரூ 3041/–ஐ விட மிக குறைவாக இருப்பதால் மறு ஏலம் விட மன்றப்பொருள் எழுதி வைக்கப்பட்டது. ஆனால் நகர்மன்றம் பரிசீலனை செய்ததில் மேற்படி கடை 1–12–2001 முதல் காலியாக உள்ளதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு அன்னாருக்கு மாத வாடகை ரூ 810/–க்கு ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டது. ( MCR No. 274 நாள் 31–7–2003)

மேற்படி கடை குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கையில் 8–10–2003ல் தெளிவுரை விளக்கம் கோரப்பட்டது. தெளிவுரை விளக்கத்தில் பழைய மாத வாடகையை விட மிக குறைவாக இருப்பதால் அன்னாருக்கு கடை வழஙக இயலாது எனவும் நகராட்சி நிர்வாக ஆணையரிடம் தெளிவுரை பெறவும் தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் 16–10–2003ல் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் மேற்படி கடை குறித்து தெளிவுரை கோரப்பட்டது. தெளிவுரை கடித எண் 80402/03/ஆர்3 நாள் 25–11–2003ல் பழைய மாத வாடகை ரூ 3041/–க்கு குறையாமல் ஏலம் விட வேண்டும் எனவும் MCR எண் 274 நாள் 31–7–2003ஐ ரத்துச் செய்ய மன்றத்திற்கு மீண்டும் பொருள் வைக்க வேண்டும். நகரமன்றம் ஏற்க மறுத்து விட்டால் இழப்பிற்கு நகர்மன்றமே பொறுப்பு என தெரிவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரின் தெளிவுரை விளக்கத்தை தெரிவிக்க நகர்மன்றத்திற்கு பொருள் வைத்ததற்கு பழைய தீர்மான எண் 274 நாள் 30–7–2003ஐ

ரத்துச் செய்து மேற்படி கடையை மறு ஏலம் விட மன்றம் தீர்மானிக்கப்பட்டது(MCR எண் 589 நாள் 17–12–2003)

மேற்படி தீர்மான எண் 589 நாள் 17–12–2003ஐ எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவரால் டபிள்யூபி 36211/2003 என்ற வழக்கு தொடரப்பட்டது மீண்டும் டபிள்யூபி எம்பி 46981/ 2004 மற்றும் டபிள்யூபிஎம்பி 46982/2004 டபிள்யூபி 39400/04 என வழக்குகள் தொடரப்பட்டது. வழக்கு எண் டபிள்யூ எண் 39400/04ல் மேற்படி கடையை மறு ஏலம் விடக்கூடாது என்று 28–4–2005ல் தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

இது குறித்து சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திருவி. ரகுபதி அவர்களிடம் கருத்துரு கேட்கப்பட்டது. கருத்துருவில் உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு உட்பட்டு மேற்படி நபருக்கு கடை வழஙகவும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் என 13–10–2005ல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேற்படி நபர் திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவருக்கு கடை வழஙகுவது குறித்து மேற்படி கோப்பு குறித்து முழு விபரத்தையும் தெரிவித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது. மன்றம் பரிசீலனை செய்ததில் (MCR எண் 484/30–11–2005ல் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் இசைவு பெற்று மேற்படி நபருக்கு கடை வழஙக மன்றம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது குறித்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் தெளிவுரை கோரப்பட்டதில் மேற்படி கடை ஒப்படைக்க ஏன் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி தேவை என்பதற்கு விளக்கம் தெரிவிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 4–1–2006ம் தேதிய நகஎண் 12811/X/R3 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக மதுரை கிளை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு ஜானி பாட்சா அவர்களிடம் 24–2–2006ல் தெளிவுரை கோரப்பட்டது. 18–3–2006ம் தேதிய கடிதத்தில் மேற்படி வழக்கறிஞர் மேற்படி வழக்கில் மேல் முறையீடு செய்யவும் இது சம்பந்தமான வழக்குகளை மதுரை உயர்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் மதுரை கிளை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திருமதி ஸ்ரீமதி அவர்களின் 11–11–2006ம் தேதிய கடிதத்தில் கடை எண் 39ஐ திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவருக்கு உயர்நீதிமன்ற உத்திரவின்படி நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்படைக்குமாறும் மனுதாரரான திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவரால் நீதிமன்றத்தில் அவதூரி வழக்கு தொடரப்படுவதை தவிர்க்குமாறும் கூறியுள்ளார்.

ஆகையால் நீதிமன்ற உத்திரவின்படி மனுதாரர் திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவருக்கு கடையினை ஒதுக்கீடு செய்யாத பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேரிடப்படும் என நகராட்சி வழக்கறிஞர் கருத்துரு வழஙகியுள்ளார். எனவே டபிள்யூபி எம்பி எம் (46981/2004, 46982/2004, டபிள்யூபி எண் 39400/2004 இல் நீதிமன்றத்தின் இறுதி உத்திரவுகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவருக்கு புதிய

பேரூந்து நிலைய கடை எண் 39ஐ மாத வாடகை ரூ 810/– அடிப்படையில் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு  மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

**தீர்மான எண் 1038 நாள் 17–11–2006**
**இப்பொருள் ஒத்திவைக்கப்பட்டது. விரிவான குறிப்புடன் மீண்டும் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது**

தலைவர்,
நகரமன்றம், தூத்துக்குடி